**Regular School Attendance**

# தொடர்ந்து பாடசாலைக்கு வருகை தரல்

## பெற்றோர்கள் மற்றும் கவனிப்பாளருக்கான தகவல்கள்





**உங்களுக்குத் தெரியுமா? ஓவ்வொரு பள்ளிப் பருவ (school term) த்திலும் எட்டு நாட்களுக்குப் பள்ளிக்கு வரவில்லையென்றால் கூட, ஆரம்பப் பள்ளிக் கல்வி முடிவுறும் போது குழந்தைகள் ஒரு வருடத்திற்கான கல்வியை இழந்திருப்பர்.**

### என் பிள்ளையை நான் பாடசாலைக்கு அனுப்ப வேண்டியது ஏன் அவசியம்?

நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் கல்வி கட்டாயமானதாகும். ஆறு வயதிலிருந்து பாடசாலையை விட்டு அகலுவதற்கான குறைந்த பட்ச வயதிற்குக் கீழ்ப்பட்ட அனைத்துப் பிள்ளைகளும் பாடசாலைக்கு வருமாறு சட்டப்படி வேண்டப்படுகின்றனர் என்பதே இதன் பொருளாகும்.

2010-ஆம் ஆண்டிலிருந்து அனைத்து நியூ சவுத் வேல்ஸ் மாநில மாணவ-மாணவியரும் Year 10-வரைக்குமான படிப்பினைப் பூர்த்தி செய்தாக வேண்டும். Year 10- இற்குப் பிறகு, தமக்கு 17 வயது முடிவடையும் வரையிலும் மாணவ-மாணவியர்:

1. பாடசாலையில் இருக்க வேண்டும் அல்லது வீட்டிலிருந்து பாடம் பயிலும் திட்டத்தில் சேர்ந்திருக்க வேண்டும், அல்லது
2. அங்கீகரிக்கப்பட்ட கல்வி அல்லது பயிற்சி முறைமையில் சேர்ந்திருக்க வேண்டும் (உதாரணமாக: TAFE, பயிலுநர் முறைமை, தொழில் பழகு பருவம் (traineeship, apprenticeship)) அல்லது
3. முழு நேர ஊதியம் வழங்கப்படும் வேலையில் இருக்க வேண்டும் (சராசரியாக வாரத்திற்கு 25 மணி நேரம்) அல்லது வேலை, படிப்பு மற்றும்.˙. அல்லது பயிற்சி முறைமை ஆகியவற்றை உள்ளடக்கிய இணைந்த முறைமை ஒன்றில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

மாணவர் பாடசாலை வருகைப் பதிவேடுகளை மிகச் சரியான முறையில் வைத்திருக்க வேண்டிய சட்டப்படியான பொறுப்பு பள்ளி முதல்வர்களுக்கு உண்டு.

மாணவர் பாடசாலைக்கு வராமல் இருந்ததற்கான காரணம் ஏற்றுக்கொள்ளத் தக்கதுதானா என்பதை முடிவு செய்யும் பொறுப்பும் பள்ளி முதல்வர்களுக்கு உண்டு.

எனவே, நோயுற்ற நிலையின் காரணமாக தமது பிள்ளை பள்ளிக்கு நீண்ட நாட்களாக அல்லது அடிக்கடி வரவில்லை என்று பெற்றோர்கள் காரணம் சொல்லும் போது மருத்துவச் சான்றுகளையோ அல்லது இதர ஆவணங்களையோ சமர்ப்பிக்குமாறு பள்ளி முதல்வர்கள் வேண்டலாம்.

தரப்படும் விளக்கம் திருப்திகரமானதாக இல்லை என பள்ளி முதல்வர்கள் கருதும் போது வராமை (absence) ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என முதல்வர்கள் பதிவு செய்யலாம்.

கட்டாயக் கல்வி கற்க வேண்டிய வயதில் உள்ள குழந்தைகள் ஏற்றுக்கொள்ள இயலாத காரணங்களுக்காக அடிக்கடி பாடசாலைக்கு வராமலிருந்தால் பெற்றோர்களை (கவனிப்பாளர்கள் உட்பட) நியூ சவுத் வெய்ல்ஸ் கல்வி மற்றும் பயிற்சித் துறை' New South Wales Department of Education and Training வழக்கு விசாரணைக்கு உட்படுத்தும் என்பதை அறிவது அவசியம்.

### என் குழந்தையை தினந்தோறும் அனுப்ப வேண்டியது அவசியமா?

**ஆம்.** உங்கள் குழந்தையை தினந்தோறும் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்பது பள்ளிச் சேர்க்கை நிபந்தனையாகும்.

கீழ்வரும் காரணங்களை முன்னிட்டு சில நாட்களுக்கு உங்கள் பிள்ளை பள்ளிக்கு வராமலிருந்தால் அப்படிப்பட்ட வராமைகள் ஏற்றுக்கொள்ளத் தக்கதாயிருக்கலாம்.

- சிறப்புச் சமயச் சடங்கு ஒன்றிற்குச் செல்ல வேண்டிய அவசியம்
- முக்கிய அல்லது அவசரமான குடும்ப நிகழ்வு ஒன்றிற்குச் செல்ல வேண்டியிருத்தல்
- பள்ளிக்குச் செல்ல இயலாத அளவுக்கு நோயுற்றிருத்தல் அல்லது தொற்றுநோய்க்கு ஆளாகியிருத்தல்

தலைப் பேன் மொய்ப்பு ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளிடையே சாதாரணமாகக் காணப்படலாம். தலைப் பேன் இருப்பபதைக் கண்டறியும் பொருட்டு தமது குழந்தைகளின் தலை முடியைப் பெற்றோர்கள் தொடர்ந்து கவனித்து வர வேண்டும் மற்றும் பேன்கள் இடும் முட்டைகள் அல்லது பேன்கள் காணப்பட்டால் இதற்கான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

கீழ் வரும் இணையதளத்தில் தலைப் பேன்கள் மற்றும் அவற்றை எப்படி ஒழிக்கலாம் என்பது குறித்த மொழிபெயர்க்கப்பட்ட தகவல்கள் காணப்படலாம்.

https://www.det.nsw.edu.au/languagesupport/documents/headlice/infosheet.htm

தலைப் பேனைக் காரணமாகக் கொண்டு மாணவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கோ அல்லது பள்ளியிலிருந்து தவிர்ப்பிப்பதற்கோ அவசியமில்லை என நி.ச.வே சுகாதார (NSW Health) த்தினால் தரப்படும் அறிவுரை கூறுகிறது. பாடசாலைக்கு நீண்ட நாட்கள் வராமல் இருப்பதற்கு தலைப் பேன்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கக் காரணம் இல்லை.

### பாடசாலைக்குத் தொடர்ந்து வருகை தருவது ஏன் அவசியம்?

பாடசாலைக்குத் தொடர்ந்து வருவது பிற்கால வாழ்க்கையில் வெற்றியடைய உங்கள் பிள்ளைக்கு உதவும்.

தினமும் பள்ளிக்கு வருவது எளிதாய்க் கற்கவும் மற்ற பிள்ளைகளுடன் நட்பினை வளர்த்துக் கொள்ளவும் உங்கள் பிள்ளைக்கு உதவும்.

பள்ளிக் கல்வியின் ஆரம்ப வருடங்களில் உங்கள் பிள்ளை அடிப்படைத் திறன்களைக் கற்றுக்கொள்ளவில்லை என்றால், பிறகு வரும் ஆண்டுகளில் அவர்களுக்குக் கற்றல் பிரச்சினைகள் எழலாம்.

NEW SOUTH WALES DEPARTMENT OF EDUCATION AND TRAINING

## உரிய நேரத்தில் பள்ளிக்கு வருவது ஏன் அவசியம்?

உரிய நேரத்தில் பாடசாலைக்கு வருவதினால்:

- நாளின் துவக்கத்தில் உங்கள் பிள்ளை மிகவும் விழிப்புணர்வுடன் இருக்கும் போது கற்பிப்பதற்கென ஒதுக்கப்பட்டுள்ள விடயங்களை அவர்கள் இழக்க மாட்டர் என்பது உறுதி செய்யப்படுகிறது
- நேரம் தவறாமையின் முக்கியத்துவம் மற்றும் வழக்கமான நடைமுறைகள் ஆகியவற்றை உங்கள் குழந்தையால் கற்றுக் கொள்ள இயலுகிறது
- வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன்பாக தமது நண்பர்களுக்குக் காலை வணக்கம் சொல்ல மாணவர்களுக்கு நேரம் கிடைக்கிறது
- வகுப்பில் இடைஞ்சல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைகிறது.

காலம் தாழ்ந்து வருவதும் 'பகுதிநேர வராமை' (partial absence) என்றே பதிவு செய்யப்படும், மற்றும் இதர வராமைகளுக்கு எப்படி விளக்கம் அளிக்கப்பட வேண்டுமோ அது போன்றே இதற்கும் காரணம் காட்டப்பட வேண்டும்.

## பள்ளி நாட்களில் எங்கள் குடும்பம் விடுமுறையில் சென்றால் நான் என்ன செய்ய வேண்டும்?

குடும்ப விடுமுறைகளுக்கென குழந்தைகளைப் பாடசாலையிலிருந்து நிறுத்த வேண்டாம் என பெற்றோர்களும் கவனிப்பாளர்களும் ஊக்குவிக்கப்படுகின்றனர். பள்ளி விடுப்பு நாட்களில் தமது விடுமுறைகளைக் குடும்பங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

பள்ளி நடைபெறும் நாட்களில் நீங்கள் குடும்ப விடுமுறையில் செல்ல வேண்டுமென்றால் பள்ளி முதல்வருக்கு முன்னதாகவே தெரிவித்து உங்கள் பிள்ளைக்க விடுப்பு மற்றும்.`அல்லது விலக்கு தேவையென வேண்டவும்.

சூழ்நிலைகளையும், எவ்வளவு நாட்களுக்கு விடுப்பு தேவை என்பதையும் பொறுத்து உங்கள் பிள்ளை பாடசாலைக்குச் செல்லாமலிருக்கும் போது முடிக்கப்பட வேண்டிய பாட வேலைகளைத் தருமாறு நீங்கள் பாடசாலையைக் கேட்கலாம்.

## தினசரி உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு ஆகியன உள்ளடங்க என் பிள்ளை அனைத்து நடவடிக்கைகளிலும் பங்கேற்க வேண்டுமா?

**ஆம்.** விளையாட்டும் மற்ற உடற்பயிற்சிகளும் உங்கள் குழந்தை ஆரோக்கியமாக இருக்க உதவும். விளையாட்டு உள்ளடங்க, தொடர்ந்து நடைபெறும் அனைத்து பள்ளி நடவடிக்கைகளிலும் பங்கேற்க வேண்டுமென குழந்தைகள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

## கீழ்வரும் காரணங்களை முன்னிட்டு உங்கள் பிள்ளையைப் பள்ளியிலிருந்து நிறுத்தாதீர்கள்.

- பிறந்தநாட்கள்
- கடைக்குப் போவது
- மற்ற குழந்தைகளைப் பார்த்துக்கொள்வது
- வழக்கப்படியான சோதனைகள் (routine check-ups) அல்லது முடி வெட்டல் போன்ற வேலைகள்
- சாதாரண குடும்ப நிகழ்வுகள்
- வீட்டிலிருந்து ஓய்வெடுத்தல்

உங்கள் குழந்தைக்கான மருத்துவ அல்லது இதர உடல்நலம் சார்ந்த சந்திப்புவேளைகள் பள்ளி நேரத்திற்கு முன்னரோ அல்லது பின்னரோ அல்லது பள்ளி விடுமுறை நாட்களிலோ ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

## என் குழந்தை பள்ளிக்குச் செல்ல இயலாத நிலை ஏற்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?

உங்கள் குழந்தை பள்ளிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டால், இதைப் பள்ளிக்குத் தெரிவிக்க வேண்டியதும், உங்கள் பிள்ளையின் வராமைக்கான காரணத்தை அளிக்க வேண்டியதும் முக்கியமானதாகும். வராமைக்கான காரணத்தைத் தெரிவிக்க வேண்டி பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் கீழ்வருவனற்றைச் செய்யலாம்:

- குறிப்பு, தொலைநகல் (fax) அல்லது மின்னஞ்சல் ஒன்றினைப் பள்ளிக்கு அனுப்பலாம்
- பள்ளிக்குத் தொலைபேசி மூலம் தெரிவிக்கலாம், அல்லது
- பள்ளிக்கு வருகை தரலாம்.

அனைத்து வராமைகளுக்கும் உரித்தான காரணங்கள் பாடசாலைக்கு விளக்கப்பட வேண்டும். பாடசாலைக்கு வராதிருந்த மாணவருக்கான இருமொழிக் குறிப்புக(டிடைபெரயட யடிளநவெநந ழெவநள)ளையும், பாடசாலைக்கு வருதல் குறித்த மேலதிகத் தகவல்களையும் School Attendance (பாடசாலை வருகை) எனும் தலைப்பின் கீழ் துறையின் இணையதளத்தில் காணலாம்.

https://www.det.nsw.edu.au/languagesupport/documents/index_s.htm

தமது குழந்தை பள்ளிக்கு வராமலிருப்பதற்காக பெற்றோர்களும், கவனிப்பாளர்களும் விடுக்கும் வேண்டுகோள்கள் மீது கேள்வி கேட்கும் உரிமை பள்ளி முதல்வருக்கு உண்டு.

குழந்தை பள்ளிக்கு வராமல் இருந்ததற்காகத் தரப்படும் காரணம் குறித்தும் பாடசாலை முதல்வர் கேள்விகள் கேட்கலாம்.

## என் பிள்ளை பள்ளிக்குப் போக மறுக்கிறது. நான் என்ன செய்ய வேண்டும்?

எவ்வளவு விரைவாய் முடியுமோ அவ்வளவு விரைவாய் நீங்கள் பள்ளி முதல்வருடன் தொடர்பு கொண்டு இது குறித்துக் கலந்துரையாடி, உதவி கேட்க வேண்டும். 'வீட்டுப் பாடத் தொடர்பு அதிகாரி' (home school liaison officer) அல்லது 'பூர்வீகக் குடி மாணவர் தொடர்பு அதிகாரி' (Aboriginal student liaison officer) ஒருவரது உதவியை பள்ளி முதல்வர் நாடலாம்.

## 'வீட்டுப் பாடத் தொடர்பு அதிகாரிகள்' (home school liaison officers) அல்லது 'பூர்வீகக் குடி மாணவர் தொடர்பு அதிகாரிகள்' (Aboriginal student liaison officers) என்பவர்கள் யார்?

உங்கள் குழந்தையின் பாடசாலை வருகையில் உதவுவதற்கென விசேடப் பயிற்சி பெற்றவர்களே 'வீட்டுப் பாடத் தொடர்பு அதிகாரிகள்' அல்லது 'பூர்வீகக் குடி மாணவர் தொடர்பு அதிகாரிகள்' ஆவர்.

அனைத்து மாணவர்களும் பள்ளிக்குத் தொடர்ந்து செல்ல வேண்டும் என்பதை ஊக்குவிப்பதற்கென பள்ளிக்கூட சமூகங்களுடன் இவர்கள் இணைந்து பணி புரிவர்.

'வீட்டுப் பாடத் தொடர்புத் திட்டம்' (Home School Liaison Program) குறித்து மேலதிகத் தகவல்களை உங்களது உள்ளூர்ப் பகுதியில் உள்ள 'கல்வி மற்றும் பயிற்சித் துறை'(Department of Education and Training) யினரின் மண்டல அலுவலகத்தின் மேலாளரிடமிருந்து நீங்கள் பெறலாம். இணையதள முகவரியில் தொடர்பு கொள்வதற்கானத் தொலைபேசி எண்கள் காணப்படலாம் அல்லது 131 536 எனும் எண்ணை நீங்கள் அழைக்கலாம்: www.det.nsw.edu.au/contactus/index.htm

## கீழ்வரும் காரணங்களில் எதையாவது முன்னிட்டு உங்கள் பிள்ளையைப் பள்ளிக்கு அழைத்துச் செல்வதில் உங்களுக்குப் பிரச்சினைகள் உள்ளனவா?

- படுக்கையை விட்டு எழ மறுத்தல்
- படுக்கைக்குச் செல்ல மறுத்தல்
- தமது உடுப்புகள், புத்தகங்கள், வீட்டுப்பாட வேலை, பள்ளிக்கூடப் பை ஆகியவற்றைக் கண்டெடுக்க இயலாதிருத்தல்
- மதிய உணவு தயாராக இல்லாதிருத்தல்
- காலை உணவை மெதுவாக அருந்துதல்
- வீட்டுப்பாடங்களைச் செய்து முடிக்காதிருத்தல்
- இரவில் நீண்ட நேரத்திற்கோ அல்லது பள்ளிக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்திலோ தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருப்பது
- பாடசாலையில் ஆற்ற வேண்டிய உரை அல்லது சோதனை இருப்பது
- பிறந்தநாட்கள்
- அலறி அழுதுகொண்டு உங்களை விடாமல் கட்டிப் பிடித்திருத்தல்

## செய்ய வேண்டிய வேலைகளைத் தொடர்ந்து ஒரே நேரத்தில் செய்யும் பழக்கங்களை ஏற்படுத்துவதற்கான சில யோசனைகள்:

- படுக்கையில் இருந்து எழுவதற்கென ஒரு நேரத்தை ஒதுக்குங்கள்
- படுக்கைக்குப் போவதற்கென ஒரு நேரத்தைக் குறியுங்கள்
- முந்தைய இரவே பள்ளிச் சீருடை மற்றும் பள்ளிக்கூடப் பை ஆகியவற்றைத் தயாராய் வைத்திருங்கள்
- முந்தைய இரவே மதிய உணவினைத் தயாராய் வையுங்கள்
- காலை உணவை உண்ணத் தொடங்கவும், உண்டு முடிக்கவும் நேரம் குறியுங்கள். உரிய நேரத்தில் வேலைகளைச் செய்யும் பழக்கம் முக்கியமானதாகும்.
- தினசரி வீட்டுப்பாட வேலைகளுக்கென நேரம் ஒதுக்குங்கள்
- குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும், பார்க்க வேண்டிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க விடுங்கள்
- குழந்தைகள் பள்ளிக்குக் கட்டாயம் செல்ல வேண்டும் என்பதால் அவர்களிடம் கண்டிப்பாய் இருங்கள்
- ஆக்கமுறையான ஊக்குவிப்பினை நிறைய அளியுங்கள்
- பிறந்தநாள் என்பது விடுமுறை அல்ல, எனவே இதில் உறுதியாய் இருங்கள்
- மணியடிக்கும் நேரம் பள்ளிக்கு வர வேண்டும் மற்றும் பள்ளி முடிந்ததும் சீக்கிரம் வீட்டுக்குச் செல்ல வேண்டும். ஆசிரியருடன் முன்பே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், உங்கள் குழந்தையின் கையை ஆசிரியரின் கையில் கொடுத்துவிட்டு நீங்கள் செல்ல வேண்டும்.

## உங்களுக்கு உரைபெயர்ப்பாளர் தேவையா?

ஆங்கிலம் புரியாத அல்லது பேச இயலாத பெற்றோர்கள் மற்றும் கவனிப்பாளர்களுக்கும், சைகை மொழியைப் பயன்படுத்தும் செவித்திறன் இழந்த பெற்றோர்கள் மற்றும் கவனிப்பாளர்களுக்கும் இயலும் வேளைகளில் உரைபெயர்ப்பாளர் சேவைகள் வழங்கப்படுகின்றன. உரைபெயர்ப்பாளர் சேவைகள் குறித்து மேலதிகத் தகவல்கள் பெற உங்கள் பள்ளியுடன் தொடர்பு கொள்ளுங்கள், அல்லது தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவையை அழைத்து உங்கள் பள்ளியுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர்களைக் கேளுங்கள். நீங்கள் அழைக்க வேண்டிய எண் 131 450 ஆகும். தேவைப்படும் மொழியில் உரைபெயர்ப்பாளர் வேண்டுமெனக் கேளுங்கள், உரைபெயர்ப்பாளர் பள்ளியுடன் தொடர்பு கொண்டு உரையாடலில் உங்களுக்கு உதவும் பொருட்டு இணைப்பில் காத்திருப்பார். இச் சேவைக்கென உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது.

© March 2010
Student Welfare Directorate
NSW Department of Education & Training